அசல் வழக்கு எண்.86/2018 நாள்: 18.09.2025

பி.சா. 1 திரு. பாலசுப்பிரமணியன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கும் வாதிக்கும் இடையே கிரைய உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி கிரைய உடன்படிக்கையின் படி கிரைய தொகையை நான் வாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல ரூ.2,50,0000/– ஐ கொடுத்துள்ளேன். மீதி கிரைய தொகையை கொடுக்கவில்லை என்றால் சரிதான், வாதி கிரையம் செய்து கொடுக்க முன் வந்தால் கிரைய தொகையை கொடுக்க தயாராக உள்ளேன். எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்தத்தில் வாதி அவரது சகோதரர்களுக்குள் உள்ள வழக்கு முடிந்த பிறகு கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

2) வாதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையே இருந்த வழக்கானது 2015–ஆம் ஆண்டிலேயே முடிந்துவிட்டது என்றால் அது பற்றி என்னிடம் கூறவில்லை. வழக்கு முடிந்தவுடன் கிரையம் செய்து கொடுப்பதாகத்தான் வாதி கூறி வந்தார். நான் வழக்கு முடிந்துவிட்டதா என்று வாதியை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் பல முறை கேட்டுள்ளேன். வழக்கு முடியவில்லை என்று கூறி வந்தார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி கடந்த 2014–ஆம் ஆண்டு அவரது அண்ணனுடன் நடைபெற்ற வழக்கில் வெற்றி பெற்று வழக்கு சொத்தில் உள்ள மின் மோட்டாரை அவரது அண்ணனிடமிருந்து சுவாதீனம் எடுத்துவிட்டார் என்ற விவரம் அறிந்து நாங்கள் வாதியை சந்தித்து ஒப்பந்தப்படி கிரைய பதிவு செய்துக் கொடுக்குமாறு கேட்டதற்கு வாதி எங்களிடம் தற்போது அவரது அண்ணன் வாதி மீது வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், அவ்வழக்கு முடிந்தவுடன் கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுத்துவிடுவதாகவும், தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3)2014–ஆம் ஆண்டிலேயே மேற்படி மின் மோட்டாரை வாதி சுவாதீனம் எடுத்துவிட்டார் என்ற விவரம் தெரிந்தும், ஏன் சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால் வாதி எனது உறவினர் என்பதாலும், தாவா சொத்தை நான் சாகுபடி செய்து வருவதாலும், நடவடிக்கை எடுக்கவில்லை. கிரைய

உடன்படிக்கை என்றால் அந்த உடன்படிக்கையில் தேதி குறிப்பிட்டிருந்தால் அந்த தேதியிலிருந்து 3 வருடத்திக்குள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றா விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4) எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய உடன்படிக்கை பி.சா.ஆ.6 –ல் வழக்கு முடிந்தவுடன் கிரைய ஆவணம் செய்துக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சரிதான். 2014 ம் ஆண்டு வழக்கு முடிந்து வாதி மின் மோட்டாரை சுவாதீனம் எடுத்துக் கொண்டார் என்றால் சரிதான். கடந்த 09.08.2015 ம் தேதி மீதி கிரைய தொகையை கொடுக்குமாறு கேட்டு வாதி எனக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அதற்கு உரிய பதிலை அனுப்பியுள்ளேன். உரிய காலத்தில் கிரைய தொகையை கொடுக்கவில்லை எனில் கிரைய உடன்படிக்கையை ரத்து செய்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான்.

5) மீதி கிரையத்தொகையை கொடுத்து செய்துக் கொள்வதாக வாதிக்கு பதில் அறிவிப்பு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பிற்கு பிறகு கிரையம் செய்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.6 ல் சுவாதீனம் ஒப்படைப்பு செய்யப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதியை சாகுபடி செய்யவிடாமல் நானும், எனது ஆட்களும் தகராறு செய்தோம் என்றால் அவ்வாறு ஒரு நிகழ்வும் நடைபெறவில்லை. நான் இடையூறு செய்யாததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

6) நான் தான் சாகுபடி செய்து வருகிறேன் வாதி என்னிடமும், நான் வாதியிடமும், பிரச்சனை செய்துக் கொண்டதில்லை. நான் சாகுபடி செய்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அடங்கல் கணக்கு வாங்கிய கிராம நிர்வாக அலுவலரின் பெயர் என்ன என்றால் அடங்கல் கணக்கு வாங்கிய கிராம நிர்வாக அலுவலரின் பெயர் ஞாபகம் இல்லை. ஒரே கிராம நிர்வாக அலுவலர் தான் பசலி 1425, 1427 பசலிக்கு அடங்கல் கணக்கு வழங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் வழங்கிய பசலிக்கான அடங்கல் கணக்கு போலியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 இரண்டும் 2016, 2018–ஆம் ஆண்டுதான் வழங்கப்பட்டது என்றாலும் வழக்கிற்கு பின்பு பெறப்பட்டது என்றாலும் சரிதான்.

7) வழக்கு தாக்கல் செய்த அன்றோ அல்லது அதற்கு முன்போ 2009 முதல் 2018 வரை சுவாதீனத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வாதி கிரைய உடன்படிக்கைத்தான் எழுதி கொடுத்தாரே தவிர சுவாதீனம் வாதியிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்த சொத்தானது மொத்தம் 157 குழிகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னுடைய பிராதான கட்சியானது வாதி 157 குழி என்று குறிப்பிடாமல் 151 செண்ட் என எழுதப்பட்டுள்ளது என்பது தான் என்றால் சரிதான்.

8) வழக்குரை சொத்து விபரத்தில் சரியாக 52 1/3 செண்ட் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்குரையில் எந்த குறைபாடும் இல்லை என்றால் சரிதான். மீதித் தொகையை கொடுத்து என்னால் கிரையம் செய்துக்கொள்ள முடியாது என்பதால் தான் வாதியிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2015 முதல் சொத்தினை அபகரிக்க முயற்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.அதனால் தான் 2015-ஆம் ஆண்டு வாதி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய பதில் அறிவிப்பிலும், எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும், 2009 முதல் சுவாதீனத்தில் இருந்து வருவதாக பொய்யாக கட்சி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய நாளில் வழக்கு சொத்தில் சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதி தான் வழக்கு சொத்தின் அனுபோகத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். உண்மையான உரிமையாளருக்கு எதிராக சுவாதீனத்தில் இடையூறு செய்ய எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் சுவாதீனத்தில் நான் 18.08.2018 அன்று இடையூறு செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவ்வாறு ஒரு நிகழ்வும் நடைபெறவில்லை. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/ - Balasubramanian

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.09.18 18:23:50 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU